இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 140
இதழ் : 07
பக்கங்கள் : 08
திகதி: 08.05.2016
விலை : 20.00

## நியாயமற்ற, அநீதியான சட்ட ஒழுங்குகளை தகர்த்து மறைமாவட்டம் முழுவதும் சமத்துவமான நிலை உருவாகட்டும்




### மேய்ப்புப்பணி மாநாடு பற்றி யாழ் ஆயர்

எமது யாழ். மறைமாவட்டத்தில் பங்குக்குப்பங்கு, ஆலயத்துக்கு ஆலயமென இருக்கின்ற நியாயமற்ற, அநீதியான தனித்துவமான ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் ஒழித்து மறைமாவட்டம் முழுவதும் சமத்துவமான, நீதியான நடைமுறைகள் உருவாக இம் மேய்ப்புப்பணி மாநாட்டை அனைவரும் பயன்படுத்தவேண்டுமென ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கேட்டுக்கொண்டார். கடந்த 5ம் திகதி வியாழன்று ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்கள் மன்றக் கூட்டத்தின் போதே ஆயர் இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

எமது மறைமாவட்டத்தின் பல பங்குகளில் காலா காலமாக பல நியாயமற்ற நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிற போதிலும் அவற்றை மாற்றுவதற்கு மேற்கொண்ட பல முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்ததென பதையும் ஆயர் சுட்டிக் காட்டினார். பங்குமட்டங்களில், ஆலயமட்டங்களில் ஒருசிலருடைய கடினமான போக்கினால் பலர் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் எடுத்துரைத்த ஆயர் அவர்கள் இம்மேய்ப்புப் பணி மாநாட்டில் இவ்விடயம் முக்கியப்படுத்தப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## திருத்தந்தைக்கு ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் உயர்ந்த விருது



ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் உயர்ந்த விருதான, அகில உலக Charlemagne விருது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகளின் ஒருங்கிணைப்பிற்காக பாடுபடுவோருக்கு வழங்கப்படும் இவ்விருதுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி, கடந்த ஆண்டு டிசம்பர் 23ம் தேதி அறிவிக்கப்பட்டிருந்தது.

மே மாதம் 6ம் திகதி வெள்ளியன்று மதியம் 12 மணிக்கு வத்திக்கானில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில், ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தலைவர், Martin Schulz, விருதுக் குழுவின் தலைவர், Jean-Claude Juncker ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

2014ம் ஆண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஐரோப்பிய பாராளுமன்றத்தில்

(8ம் பக்.பார்க்க...)

## "கண்ணீரைத் துடையுங்கள்" மாற்றுவலுவுடையோருக்கான இரக்கத்தின் யூபிலி

"இறைவன்நமக்கு ஆறுதல் அளிக்கிறார். நம் துயரங்களின் காரணங்களை இறைவனால் மட்டுமே நீக்க முடியும் என்பதற்கு சாட்சியம் பகர்ந்து, நம் சகோதர, சகோதரிகளைத் தேற்றுவதற்கு, நாம் அழைக்கப்பட்டுள்ளோம்" என்ற வார்த்தைகளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியாக மே 5, வியாழனன்று வெளியிட்டார்.

உடலாலும், உள்ளத்தாலும் துன்புறுவோருக்கு இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் பலன்கள் சென்றடையவேண்டும் என்ற எண்ணத்துடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "கண்ணீரைத் துடையுங்கள்"

(8ம் பக்.பார்க்க...)

## கடத்தப்பட்ட அருட்தந்தை குறித்து தெளிவான தகவல்கள் இல்லை



ஏமன் நாட்டின் ஏடென் நகரில், இரு மாதங்களுக்கு முன் கடத்தப்பட்ட அருள்பணி தாமஸ் உழுன்னலில் அவர்களைக் குறித்து இன்னும் தெளிவான தகவல்கள் வெளியாகவில்லை என்று பிதேஸ் (Fides) செய்திக் குறிப் பொன்று கூறுகிறது.

மார்ச் மாதம் 4ம் தேதி, ஏடென் நகரில், பிறரன்பு மறைப்பணியாளர் சபையைச் சேர்ந்த 4 அருள் சகோதரிகள் உட்பட, 12 பேரைக் கொலை செய்த தீவிரவாதக் கும்பல் ஒன்று, அவ்வில்லத்தில் தங்கியிருந்த அருள்பணி உழுன்னலில் அவர்களைக் கடத்திச் சென்றது.

அருள்பணி உழுன்னலில் அவர்கள் உயிருடன் இருப்பதாக

(8ம் பக்.பார்க்க...)

## வாழ்த்துக்கள்



மே 13ம் திகதி தனது பிறந்த தினத்தை நினைவு கூரும் எமது அன்புக்குரிய ஆயர் அவர்களை குருக்கள், துறவிகள், இறைமக்கள் சார்பில் அன்போடு வாழ்த்துகின்றோம்.

## இளவாலை புனித வளனார் ஆண்கள் விடுதியின் நாம விழா





கடந்த, 01.05.2016ல் இளவாலை தூய வளனார் விடுதி மாணவர்களால், தூய வளனாரின் மகிமையை நினைவு கூர்ந்து, தொழிலாளர் தினமும் விடுதியின் பாதுகாவலரின் நாம விழாவும் முழுநாள் விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு புனித வளனார் விடுதியின் இயக்குனர் அருட்பணி J.A.யேசுதாசன், விடுதிப் பொறுப்பாளர் அருட்சகோதரன் தொபியாஸ், ஏனைய பணியாளர்கள் மாணவர்கள் விடுதி முன்றலில் ஒன்றுகூடியிருக்க, புனித வளனாரின் கொடி ஏற்றப்பட்டு, விடுதிக்கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து, வீதியருகே அமைந்துள்ள, புனித வளனாரின் திருச்சுருபம் அமைந் துள்ள வாயிலிலே, அருட்தந்தையும் ஏனையோரும் இணைந்து புனிதரிடம் வேண்டுதல் செய்து, திருப்பலி இடம் பெற்றது.


புனித கென்றியரசர் கல்லூரியின் உப அதிபர் றெக்ஸ்சன் அடிகளார் திருப்பலியை நிறைவேற்றினார்.

செல்வி. தவம் குருசுமுத்து
நவாலி.

## அன்னை திரேசாவுக்கு புனிதர்பட்டம்



அருளாளர் அன்னை திரேசா புனிதராக உயர்த்தப்படும் சடங்கு இவ்வாண்டு செப்ரெம்பர் 4ம் திகதி இடம் பெறும் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளார்.



# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.

## "சாட்சிகளாக வாழுங்கள்"

பொதுவாக ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கிறார் அல்லது நம்மைவிட்டுப் பிரிந்துபோகிறார் என்றால், அம்மனிதர் சொல்லும் ஒவ்வொருவாக்கியமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும். பழையஏற்பாட்டில் ஆபிரகாம், யாக்கோபு, யோசுவா ஆகியோரின் இறுதிவார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இயேசுவும் தான் உயிர்த்தபிறகு, நாற்பதுநாட்கள் சீடர்களோடு இருந்து, பலவற்றைக் கற்றுத் தருகிறார். இறுதியாக அவர் விண்ணேற்றம் அடையும்போது "தூய ஆவி உங்களிடம் வரும்போது, நீங்கள் கடவுளின் வல்லமையைப் பெற்று, உலகின் கடையெல்லைவரை எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள்" என்கிறார். அதாவது "சாட்சிகளாக இருங்கள்" என்பதே இயேசுவின் இறுதிவார்த்தை. எனவேநாம் அதனை நமது சிந்தனைக்கு உட்படுத்தி, வாழ்வாக்க முயல்வோம்.

"சாட்சிகளாக வாழுங்கள்" என்றகருத்தை ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்போம். இயேசுவுக்கு எப்படிச் சாட்சியாக இருப்பது?. அது வேறொன்றும் இல்லை. ஆண்டவர் இயேசு போதித்ததை வாழ்ந்து காட்டுதலே மிகப்பெரிய சாட்சியவாழ்வாக இருக்கும். "செயல்படு, மீண்டும் செயல்படு, ஒருவேளை தேவைப்பட்டால் வார்த்தைகளையும் பயன்படுத்திக்கொள்" என்று சாட்சிய வாழ்வுக்கு மிகச் சிறந்தவிளக்கம் தருவார் புனித பிரான்சிஸ் அசிசியார். ஆகவே, சாட்சியாகவாழ்வது என்பது இயேசுவின் நற்செய்தி அறிவிப்பது மட்டுமல்ல, அதனை வாழ்ந்து காட்டுவது என்ற விதத்தில் நாம் புரிந்துகொள்ளலாம்.

இன்றைக்கு நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக்காலக்கட்டத்தில், கிறிஸ்தவர்களுக்கு எதிராக அதிகமான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் நாம் கிறிஸ்தவர்களாக வாழ்வது என்பது மிகச் சவாலான ஒன்று. ஆனாலும் பலர் தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறந்து இயேசுக்கு சான்றுபகர்கிறார்கள்.

2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பீகார் மாநிலத்தில் உள்ளகந்தமாலில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை நிகழ்ந்தபோது ஏராளமான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். அப்போது விஸ்வ இந்துபரிஷத் என்ற மதவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சரிதாபட்நாயக் என்ற கர்ப்பிணிப் பெண்ணை கத்திமுனையில் வைத்து, "நீ கிறிஸ்தவ மதத்தை விட்டு விட்டு வெளியே வந்துவிடு, இல்லையென்றால் உன்னையும், உன்னுடைய குழந்தையையும் உயிரோடு கொன்றுவிடுவேன்" என்றான். ஆனால் அந்த கிறிஸ்தவப் பெண்மணியோ, "நான் சாவைக் கண்டு பயப்படவில்லை, இயேசுவுக்காக என்னுடைய உயிரையும் துறப்பேன்" என்றாள். இதைக் கேட்டு சீற்றம் கொண்ட அந்த கொடியவன் கர்ப்பிணியாக இருந்த அந்தப்பெண்ணைக் குத்திக் கொலைசெய்தான்.

இயேசுவுக்காக எதையும் செய்யத் துணியும் இவர் போன்ற மனிதர்களைப் பார்க்கின்றபோது அவர்களைக் குறித்து கேள்விப்படும் போது உண்மையிலே நாம் விசுவாசத்தில் உறுதியடைகின்றோம். எனவே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் இயேசுவுக்கு சான்றுபகர வேண்டும்.

இன்று மக்கள் மனசாட்சியை அடகுவைத்துவிட்டு, எப்படியும் வாழ்க்கையும் வாழலாம் என்றதொரு மனநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நம்மை ஆளக் கூடியதலைவர்களோ நமக்கு முன்மாதிரியாக இல்லாமல் பொய்யும், புரட்டிலும், கையூட்டிலும் மூழ்கிக் கிடக்கிறார்கள். இத்தகைய தருணத்தில் நாம் நேரியவழியில் நடப்பது மிகப்பெரிய சாட்சிய வாழ்வாக இருக்கும்.

திருப்பாடல் 7:10 ல் வாசிக்கின்றோம் "நேரிய உள்ளத்தோரை கடவுள் விடுவிப்பார்" என்று. நாம் நேரிய வழியில் நடந்து, கடவுளின் அருளாசிரைப் பெறுவோம்.

**ஆசிரியர்**

## இரக்கத்தின் யூபிலி

08 டிசம்பர் 2015 – 20 நவம்பர் 2016




*எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும்நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னில் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.*

*"பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"*

*ஆமென்.*

உமது அடியாள்

Advt-50/16

## 25ம் ஆண்டு நினைவு



**அருட்திரு**

**லோ.வ. இராயப்பு அ.ம.தி**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02.07.1929 | 06.05.1991 |

ஆண்டவன் இயேசுவின் அற்புதமான குருத்துவப் பணிதனை செவ்வனே செய்து ஒழுக்கவியலை திருச்சபையின் உண்மைக்கேற்ப இடித்துரைத்தீர்கள்...
குருக்களை உருவாக்கும் பணியிலே நல் தந்தையாக, அன்னையாக, ஆசிரியனாக வழிகாட்டியாக திகழ்ந்தீர்கள்...
அன்பையும், பாசத்தையும் அனைவருக்கும் அளிக்கும் அன்பு அருட்தந்தையாக விளங்கினீர்கள்...
என்றும் நினைக்கிறோம் உங்கள் அன்பான வாழ்வை...
அமைதி கொள்க ஆண்டவன் மடிதனில்...
எங்களுக்காகவும் பரிந்து பேசுங்கள்...

*என்றும் நினைக்கும்*
*அழகையா குடும்பம், பிலிப் குடும்பம்,*
*பாலதாஸ் குடும்பம்.*

Advt-54/16

## விண்ணக வாழ்வில்
## 2ம்ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் எட்வேட் துர்ராஜா**
**வெலிசோர்பிள்ளை**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.12.1935 | 22.04.2014 |

"வாழ்விலே உங்களை நேசித்தோம்
மரணத்திலும் உங்களை மறவோம்"


"இரக்கம் நிறைந்த இறைவா, உம் அடியானாகிய அமரர் எட்வேட் ராஜா நீர் கொடுத்த தந்தை என்னும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இவர் மீது உமது எல்லையில்லாக் கருணையைப் பொழிந்து இவரது குறை குற்றங்களை மன்னித்து உமது நித்திய அரவணைப்பில் இவரைச் சேர்த்தருளுமாறு உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

*பாசமுடன் நினைவுகூரும்*
*அருமை பிள்ளை (லண்டன்): மகன்*
*அருள் பிறேம்குமார், உறவினர், மகள்*
*கிறிஸ்ரினா.*

Advt-45/16

## விண்ணக வாழ்வின்
## 3ம் ஆண்டு நினைவு அஞ்சலி

**அமரர் பீற்றர் இம்மனுவேல்**
**றூபசிங்கம் (பாலசிங்கம்)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.01.1944 | 29.04.2013 |

*"வாழ்விலே உங்களை நேசித்தோம் மரணத்திலும் உங்களை மறவோம்"*

இரக்கம் நிறைந்த இறைவா, உம் அடியானாகிய அமரர் பீற்றர் இம்மானுவேல் றூபசிங்கத்திற்கு நீர் கொடுத்த நல் வாழ்வு என்னும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இவர் மீது உமது எல்லையில்லாக் கருணையைப் பொழிந்து, இவரது குறை குற்றங்களை மன்னித்து, உமது நித்திய அரவணைப்பில் இவரைச் சேர்த்தருளுமாறு உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

466/7, கோவில் வீதி,
1ம் ஒழுங்கை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

Advt-46/16

பாசமுடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்.

# எங்கே அவர்?



**"தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத்தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி."**

**(லூக் 11:13)**

அது ஒருகுறிப்பிட்ட கிறிஸ்தவ சபையினரின் வழிபாட்டுக் கூட்டம். திரளான மக்கள் கூடியிருந்தார கள். வானத்தை நோக்கிக் கைளை விரித்தபடி ஆடியும் பாடியும் பரவசப்பட்டுக் கொண்டிருந் தனர். குறிப்பாகப் பெண்கள் தலையை ஆட்டி யும் அங்கங்களைக் குலுக்கியும் ஆடினர். சிலபெண்கள் கும்மியடித்தனர். சிலர் நடுங்கிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் அல்லேலுயா என்று சத்தமிட்டனர். பாபுவுக்கோ ஆடவோ பாடவோ வரவில்லை. அமைதியா யிருந்தான். ஆனாலும் மனதுக்குள் துக்கம் பொங்கியது. தூய ஆவியானவர் மீது அவனுக்கு நிறைந்த விசு வாசம் உண்டு. எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஆவியானவருக்கு பொறுப்புக் கொடுத்து விட்டே செய்வான். எல்லாம் நல்லப்படியாகவே நடக்கும். ஆனால் இந்தச் சபை வழிபாடுகளைப் பார்க்கும் போது பரிசுத்தஆவியானவர் தன்னோடு இல்லை யென்றே நினைக்கத் தோன்றியது.

"பார்த்திங்களா பிரதர்.... இதுதான் தூய ஆவியானவரின்அபிசேகம் உங்கட கத்தோலிக்க சபையில இதுக்கெல்லாம் இடமே இல்ல... அங்க ஆவியானவர் இருந்தாத்தானே அபிசேகம் நடக்கப் போகுது. எங்க சபையைப் போல ஆவிக் குரிய சபைகள்லதான் ஆவியானவர் வாசம் பண்ணுவார். இப்பவாவது புரிஞ்சிகிட்டு எங்க சபைக்கு வாங்க." நண்பனின் பேச்சுஉள்மனதில் ஆத்திரத்தைக் கிளப்பினாலும் அவன் சொல் வதிலும் சில உண்மைகள் இருப்பதுபோல் பட்டது பாபுவுக்கு.

அது தமிழ்நாட்டின் மிகப்பெரிய இலங்கை அகதிகள் முகாம். பலசமயத்தைச் சேர்ந்த வர்களும் அங்கே இருந்தார்கள். அடிக்கடி ஏதாவது ஒருகிறிஸ்தவ சபையின் பெயரைச் சொல்லிக் கொண்டு யாராவது வந்துகொண்டி ருப்பார்கள். அங்குள்ள கத்தோலிக் கர்கள் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரைச் சொல்லிக் கொண்டு யார் வந்தாலும் அவர்களை வரவேற்று உபசரிப்பது வழக்கம். ஆனால் வருபவர்க ளோ கத்தோலிக்க திருச்சபையைப் பற்றிக் குறை சொல்வதோடு, பரிசுத்தஆவியின் பிரசன்னம் இல்லாத ஒரு சபை என்று வர்ணித்து அங்குள்ள வர்களைக் குழப்பிவிட்டுச் செல்வர். சிலசந்தர்ப் பங்களில் இதைப் பொறுக்கமுடியாத கத்தோலிக்க மக்களால் துரத்தப்படுவதும் உண்டு.

பாபுவும் குழம்பிப் போயிருந்தான். "ஆவியானவர் என்னோடு இருந்தால் ஏன் என்னால் ஆடவோ உச்சக் குரலெடுத்துப்பாடவோ முடிய வில்லை" மற்றவர்கள்சொல வதுபோல் தூய ஆவியானவர் கத்தோலிக்க திருச்சபை யில் இல்லையோ.." யோசித்ததில் தலையைச் சுற்றியது..

சிலநாட்களின் பின், அவன் தூய ஆவியானவரின் அபிசேகத்தால் நிறைந்ததாகக் கூறிக்கொள்ளும் தன் நண்பன் வீட்டுக்குச் சென்றபோது அங்கு அவனுடைய மாறுபட்ட முகத்தைக்கண்டு திகைத்து நின்றான். "எதுக்கு நீ எல்லாம் உயிரோட இருந்து என் உயிரை வாங்கிட்டு இருக்கே.... செத்துத் தொலைய வேண்டியது தானே... நீ இனிமே உயிரோட இருந்து எனக்கு என்ன லாபம் கிடைக்கப் போகுது".... வயதான தாயைத் தாறுமாறாக அவன் திட்டியவார்த்தைகள்.... அதைத் தாளமுடி யாமல் அந்த அன்னையின் கண்களில் இருந்து வழிந்தோடிய கண்ணீர்... தூய ஆவியால் நிறைந்த ஒருவரால் இப்படியெல்லாம் பேசமுடியுமா?.. சிந்தனையோடு உள்ளே செல்லப்பிடிக்காமல் திரும்பி வந்துவிட்டான்.

இன்றைய கத்தோலிக்க சமூகத்திலே தூய ஆவியானவரைப் பற்றிய புரிந்துணர்வு குறைவாகவே காணப்படுகிறது. ஆடுவதும், பாடுவதும், துள்ளிக் குதிப்பதும், கும்மியடிப்பதுமே ஆவியானவரின் பிரசன்னம் என்றுபலர் நினைத்துக் கொண்டிருக் கின்றனர். பிரிவினைச் சபையினர் தங்களிடமே தூய ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்று கதை பரப்பிக் கொண்டு திரிகின்றனர். இவற்றையெல்லாம் பார்த்துப கத்தோலிக்கர் பலர் குழம்பிப் போவதோடு, ஆண்ட வரின் ஆவியைத் தேடி வேறு வேறு பிரிவினைச் சபைகளுக்குச் செல்வதும் வாடிக்கை யாகிவிட்டது. பாபுவும் அப்படித்தான் குழம்பி நின்றான்.

"என்ன ஸார் பலமான யோசனை?" ஊர்க்கார நண்பனின் குரலில் சிந்தனை கலைந்தவன் தன் மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினான். "நம்ம குருக் கள் பூசைவைக்கிறதோட களைச்சிப் போயிட றாங்களே... வாரத்தில ஒருபிரசங்கம்... அவ்வள வுதான்..... அவங்க அப்பிடியில்லையே... பைபி ளைக் கையில ஏந்திக்கிட்டில்ல... ஊர்ஊராப் போய் விளக்கம் கொடுக் கிறாங்க... இங்க தேயுது... அங்க வளருது..." நண்பனின் நையாண்டிப் பேச்சு...

இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்மணி "ஏம்ப்பா.... நீங்கள்லாம் மாசாமாசம் முதல் சனிக்கிழமை நம்ம சர்ச்சில நடக்கிற உபவாச வழிபாட்டுக்கு வர்றதில்லை யா?.. வந்துபாருங்க. நம்மகுருக்களும் ரொம்ப நல்லாவே நடத்திறாங்கப்பா... நமக்குத்தான் நேரம் கிடைக்கிறதில்ல... அடுத்தவாரம் நம்ம பக்கத்து ஊருக்கு கேரளாவில இருந்து டிவைன் இல்லத்து ஆட்கள் வர்றாங்க... அதெல்லாம் சொன்னாப் புரியாது.. வந்து அனுபவிச்சாத்தான் தெரியும்..... வாங்க.... அங்க உங்க குழப்பத்துக் கெல்லாம் பதில் கிடைக்கும்."

அவர்கள் தியானத்தில் கலந்துகொண்டபோது கத்தோலிக்க சபையில் இப்படியும் தியானம் நடக்கிறதா என்று அதிர்ந்துபோயினர். வேளிஉலக நினைப்பே வரவில்லை. அற்புதமாக இருந்தது. குடும்பத்தினரை அழைத்துவரவில்லையே என்ற ஆதங்கம் மனதைப் பிழிந்தது.

தூய ஆவியானவரின் அபிசேகத்துக்காக செபித்த போது அங்கும் பலர் குத்தாட்டம் போட்ட னர். ஆவியால் நிறைந்து மறை உரையாற்றிய ஓர் அருட்ச கோதரர் "பலபேர் ஆவியானவர் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், நடுங்கிக் கொண்டும் வருவார் என்று தப்பாப் புரிஞ்சிகிட்டு இருக்கிறீங்க.. தயவுசெய்து பெண்கள் கண்டபடி ஆடாதீங்க..... பார்க்கவே அசிங்கமா இருக்கு. ஆண்டவரின் ஆவியானவர் அன்பின் ஆவி, அமைதியின் ஆவி, பொறுமையின் ஆவி, சாந்தத்தின் ஆவி, தன்னடக்கதின் ஆவி..... அப்போஸ்தலர்களும், மாதாவும் ஆவியானவர் இறங்கியவுடன் கோலாட்டம் போட்டு கும்மியடித் தனர் என்று பைபிளில் இல்லை. கோழைத்தனம் நீங்கி புதுப்புது ஆற்றல்களைப் பெற்றனர். பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை இல்லாமல் ஒரே தலைமையின் கீழ் நம்ம கத்தோலிக்க திருச்சபை இவ்வளவு கடடுக்கோப்பாகவும் நிருவாகத் திறமையு டனும்இருக்கமுடியுமா?... உறுதிப்பூசுதல்வழியாக நம்மிடம் வந்த கடவுளின் ஆவியானவர் நம்ம கூடவேதான் எப்போதும் இருக்கிறார். ஆவரை உயிருள்ளதாகவும் உயிரற்றதாகவும் ஆக்குவது நம்ம நடவடிக்கைதான்..."

அடுத்துவந்த குருவானவர், "இறைவனுடைய வல்லமை, சக்திதான் தூய ஆவயானவர். நங்கள்விசு வாசத்துடன் அழைத்தால் தென்றலாக, புயலாக, தீபமாக, தீயாக, மழையாக, பனியாக இறங்கிவருவார். அற்புதம் செய்வார். அவர் உங்களுடன்தான் இருக்கிறார்..... அவரைத் தேடி அலையாதீங்க...."

பாபுவின் உள்ளத்துக்குள் ஆங்காங்கே கட்டியிருந்த கட்டுக்கள் எல்லாம் உடைந்து கண்கள் வழியாகக் கண்ணீராக வெளியேறின. இப்போது அவனுக்குள் ஒருவிதமான வெளிச்சம்.... கதம்ப மணத்துடன் அவனைத் தொட்டுத் தடவிச் சென்ற தென்றலில் துயஆவியின் தொடுகையை உணர்ந்தவனாக மனக் குழப்பங்களற்ற நிலையில் கைகளைக் கூப்பியபடி பரிசுத்தஆவியானவரைத் துதிக்கத் தொடங்கினான்.

**- Gnanesvary. -**

## அருட்தந்தை சறத்ஜீவன் நிதித்திட்டம்

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் மக்களுக்காக தன்னுயிர் ஈந்த அருட்தந்தை சறத்ஜீவனின் நினைவாக "அருட்தந்தை சறத்ஜீவன் நிதித்திட்டம்: 2013ம் ஆண்டு அவரது குடும்ப அங்கத்தவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பத்தில் உருத்திரபுரம் பங்கைச் சேர்ந்த ஆறு மாணவர்களுக்கு கல்வியுதவியாக மாதாந்தம் ஆயிரம்ரூபா வழங்கப் பட்டு வந்தது. 2014ம் ஆண்டு ஆனி மாதம் 10ம் திகதி முன்னாள் யாழ் ஆயர் மதிப்பிற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் யாழ் ஆயர் மதிப்பிற்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளாரை இயக்குனராக கொண்டு "அருட்தந்தை சறத்ஜீவன் நிதித்திட்டம்" உத்தியோகபூர்வமாக இயங்கத் தொடங்கியது. அருட்தந்தை ரவிராஜ் பொருளாளராகவும், செல்வி. நித்திலா செயலாளராகவும், அருட்தந்தை கிருபாகரன், செல்வி. நங்கையின் சாமிநாதன் அங்கத்தவராகவும் உள்ள 5பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களால் இந்நிதித் திட்டம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து பல நல்ல உள்ளம் படைத்தவர்களினால் மேலும் நிதியுதவி கிடைக்கப் பெற்றதன் காரணமாக 23 மாணவர்களிற்கு மாதாந்தம் கல்விக்கான நிதி வழங்கப் பட்டு வருகின்றது. வறுமைக் கோட்டிற்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட அதே நேரம், கல்வியில் ஊக்கமுள்ள மாணவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்படுகின்றது. உருத்திரபுரம், இரணைப்பாலை, குமுளமுனை மற்றும் முல்லைத்தீவு பங்குகளை சேர்ந்த 23 மாணவர்கள் பயனடைகின்றார்கள். அருட்தந்தை சறத்ஜீவன் நிதித்திட்டத்திற்கு உதவி வழங்கும் அனைவரிற்கும் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதிற்கு உதவும் அருட்தந்தையர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றோம்.

நித்திலா ஸ்ரீயாம்பிள்ளை

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 10 - 10 - 1931 | இறப்பு 11 - 04 - 2016

அமரர்

**சில்வேஸ்ரர் மரிசலீன் (அரியம்)**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

எங்கள் அன்பு ஐயா உங்கள் அன்பும் அரவணைப்பும் எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும். இவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

348, கடற்கரை வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

Advt-48/16

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 23 . 04 . 1946 | இறப்பு 08 . 04 . 2016

அமரர்

**எலியாஸ் வஸ்தியாம்பிள்ளை (ராஜா)**

(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகஸ்தர்)

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்
எம் கண்ணீருக்கும் தடைபோட முடியவில்லை
உம் நினைவுகளுக்கும் தடைபோட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு நீர்
எங்கு சென்றீரோ.

அளம்பில் தெற்கு
முல்லைத்தீவு.

Advt-49/16

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

## 7ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு : 13-05-1968

குருத்துவம் : 14-05-2003

உதிர்வு : 18-05-2009

அருட்தந்தை

**ம. ததேயுஸ் சறத்ஜீவன்**

"நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். நான் தாகமாய் இருந்தேன். என் தாகத்தை தணித்தீர்கள். மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்..."
மத். 25:35,40.

இவரின் ஆன்ம சாந்திக்காக 18.05.2016 புதன்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத் திலும், 18.05.2016 புதன்கிழமை அன்று காலை 07.30 மணிக்கு புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் குடும்பத்தினர்
அருட்தந்தை யூட் அமலதாஸ்
பங்குத்தந்தை புனித பற்றிமா அன்னை
ஆலயம், உருத்திபுரம்.

இல.5 பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-42/16

---

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு



மண்ணில் 17 - 06 - 1966 | விண்ணில் 05 - 05 - 2015

**அமரர். சுகிர்தரன் பெனிற்றோ றோய் சக்கரியாபிள்ளை. (ZSB Roy)**

"நீதிமானின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன வேதனைகள் எதுவும் அவர்களைத் தீண்டாது"

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
இருந்தும் இவ்வுலகை விட்டுச் சென்று
ஆண்டு ஒன்று ஆனதுவோ!

ஆறவில்லை உம் பிரிவின் துயரம்
வானக வீட்டில் பிதாவின் வலப்புறம்
நீர் மகிழ்ந்திருக்க
வேண்டுதலுடன் வேண்டுகின்றோம்!

நிரந்தர முகவரி
பாண்டியன்தாழ்வு,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி
சாளிறோய், பெல்ஜியம்.

Advt-53/15

என்றும் இவரின்
அன்பு நினைவுகளோடு
குடும்பத்தினர்.

---

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி



**S.A.E. இரட்ணராஜா**

பிறப்பு 27.05.1935 | இறப்பு 20.05.2004

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவைதனில் ஓர் ஆசானாய்
ஊரினில் கலைவித்தகனாய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, திருமதி இ.இரட்ணராஜா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பொன்.

Advt-47/16

---

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1951-04-12 | இறப்பு 2008-04-20

"நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில்; விண்ணரசு அவர்களுக்குரியது".
(மத். 5:10)

அருட்தந்தை

**ம.சே.கருணாரெத்தினம்**

பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர்
அருட்பணி ம.பெ. ஞானரெத்தினம்.




முன்னைய தொடர்ச்சி...

# பிரான்சிஸ்கோ டி வாஸ் கொன்செலோஸ்ஸீக்குப் பின் வந்த ஆயர்கள்

பிரான்சிஸ்கோ டி வாஸ் கொன் செலோஸ்ஸீக்குப் பின் வந்த ஆயர்களும் போத்துக்கேயராக இருந்த படியால் ஒல்லாந்தரின் ஆட்சிக்குள் இருந்த கொச்சினுக்கு அவர்களால் முன்னர் இருந்தவர்களைப் போல வர முடியவில்லை. அவர்களின் விபரம் பின்வருமாறு:

* டொம் அந்தோனியோ டி கொன்செய்சா ஓ (Dom Antonio De Conceisao) (1745)
* டொம் கிளமென்ற் ஜோஸ் கொல்லாக்கோ லெய்டாஓ (Dom Clement Jose Colacoo Leitao) (1745-1771)
* டொம் செபஸ்ரியா ஓ டா கொஸ்தா (Dom Sebastia o da Costa) (1771)
* டொம் மனுவல் டி சாந்த கத்தரீனா (கார்மேல் சபை) (Dom Manuel De Santa Catherina) (O.C.D) (1778-1783)
* டொம் ஜோஸ் டி சொலெடாட் (கார்மேல் சபை) (Dom Jon De Soledad) O.C.D. (1785-1818)
* டொம் தோமஸ் டி நொறோன் ஹ ஈ பிறிட்டோ (டோமினிக்கன் சபை) (Don Tomas De Noronha E Britto. O.P. (1819)
* டொம் ஜோ ஆக்கிம் டி சாந்த றீற்றா போத்தெல்லோ (Dom Joa Kim De Santa Rita Boethello) 1832

17ம் நூற்றாண்டு ஆரம்பத்தைத் தொடர்ந்து கொச்சின் மறைமாவட்டத்தில் அவதானிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் கொச்சின் மறை மாவட்டத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த எல்லாக்குருக்களும் கொச்சின் ஆயரின் நேரடி வழிகாட்டலில் செயல்பட்டனர் என்று சொல்ல முடியாது. அங்கு பணியாற்றிய மறை மாவட்டக்குருக்கள் மட்டும் அவரின் நேரடி ஆளுகைக்குள் செயல்பட்டு வந்தனர். ஆனால் அங்கு பணியாற்றிய கணிசமான தொகையினரான துறவற சபைகளைச்சார்ந்த குருக்கள் தத்தம் துறவற சபையின் மாகாண முதல்வர்களின் கீழ் அல்லது மாவட்ட முதல்வர்களின் கீழ் செயல்பட்டனர். இதனால் தான் 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கொச்சின் ஆயர் அந்திரே டி சாந்த மரியாவிற்கும் யேசு சபையினருக்கு மிடையே முரண்பாடு ஏற்பட்டது. இதனால் யேசு சபையினர் கொச்சினில் இருந்து மட்டுமன்று அதன் கீழ் வந்த மன்னாரிலிருந்தும் வெளியேறவேண்டி வந்தது என்று பார்த்தோம். ஆயர் பிரான்சிஸ்கோ டி வாஸ்கொன் செலோஸ் அவர்களின் காலம் வரைக்கும்(1743 வரை) இலங்கையில் பணியாற்றிய ஒரட்டோரியன் சபைக் குருக்களும் கொச்சின் ஆயர்களுக்குமிடையே பொதுவாக நல்லுறவும் புரிந்துணர்வும் இருந்து வந்தது. கொச்சின் ஒல்லாந்தர் கைவசம் வந்த பின் கொச்சின் ஆயர்கள் இடம் பெயர்ந்து வேறு வேறு இடங்களிலிருந்தாலும் பல்வேறு வசதியீனங்கள் மத்தியிலும் அவர்கள் இலங்கைக்குச் செல்லும் மற்றும் இலங்கையிலிருந்து திரும்பும் ஒரட்டோரியன் சபையினருக்கு நல்லுபசரிப்பை வழங்கிவந்தனர். சில சந்தர்ப்பங்களில் சில குருக்கள் தமது இலங்கைப்பயணத்தின் போது கொச்சின் மறை மாவட்டத்தினூடாகச் சென்ற போது ஆயரின் வேண்டுகோளுக்கிணங்க சில சிறப்புப் பணிகளில் உறுதுணையாளராகவுமிருந்துள்ளனர் என்று ஆயர் பிரான்சிஸ் டி வாஸ் கொன்செலோஸ் சுட்டிக்காட்டியுள்ளார். ஆம் இலங்கைப்பயணத்தின் போது அங்கு வந்திருந்த டியோகோ டொ றொசாறியோ, டியோகோ டி மெல்லோ அவர்களது உதவியில்லாமல் யேசு சபை மறை சாட்சியாகிய புனித ஜோண் டி பிறிட்டோவிற்குப் புனிதர் பட்டம் வழங்குவதற்கான பணிகளை நிறைவு செய்திருக்க முடியாதென்று ஆயர் குறிப்பிடுகின்றார்.

கொச்சின் மறை மாவட்டத்துகுட்பட்ட பகுதிகளில் கணிசமான இடங்கள் ஒல்லாந்தரின் கைவசமே தொடர்ந்து இருந்தமையால் ஆயர் பிரான்சிஸ்கோ டி வாஸ் கொச்செலோஸ் அடிகளுக்குப் பின் வந்த ஆயர்களும் பல நெருக்குவாரங்களைச்சந்திக்க வேண்டியிருந்தது. இதனால் இலங்கை மட்டில் இவர்களால் அதிக கவனம் செலுத்தமுடியாமல் இருந்திருக்கலாம். ஆயினும் கொச்சின் ஆயருக்கும் இலங்கைக்கும் தொடர்புகள் இருந்தனவோ இல்லையோ கோவாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்புகள் இருந்துகொண்டேயிருந்தன. இலங்கையில் இருந்து ஒரட்டோரியன் சபைக்குருக்கள் தம்மைப்பற்றியும், தமது பணிகளைப் பற்றியும், தேவைகள் பற்றியும் அறிக்கைகளை அனுப்பிய வண்ணமேயிருந்தனர். கோவாலிருந்தும் குருக்கள் கிரமமாக இலங்கையில் மறைப்பணியாற்றப் போய் கொண்டும், இலங்கையில் பணியாற்றிய குருக்கள் கோவாவுக்கும் வருவதுமாயிருந்தனர். இக் காலத்தில் கொச்சினுடன் தொடர்புகள் குறைந்து வந்த கொண்டிருந்தாலும் டொம் ஜோஸ் டி சொலெடாட் (O.C.d) 1785-1818 ஆயராக இருந்தபோது இவர் இலங்கை தனது ஆட்சியதிகாரத்திற்குட்பட்ட பகுதியென்ற உரிமையுடன் கடிதங்கள் எழுதிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கொச்சின் ஆயராவதற்கு முன் சில வருடங்கள் அம் மறைமாவட்டப் பரிபாலகராக இருந்தார். இந்நாட்களில் கொழும்பில் வந்து 4 மாதங்கள் தங்கியிருந்த ஒரு குரு இலங்கையில் பணியாற்றிய ஒரட்டோரியன் சபையினரையும் அவர்களது பணிகளையும் பற்றிக்குறைகூறி ஒரு அறிக்கை தயாரித்து கொச்சின் ஆயருக்கு அனுப்பியிருந்தார். அத்துடன் நிலைமையை நேரில் வந்து ஆராய கொச்சின் ஆயர் ஒரு தகுதிவாய்ந்த குருவை தரிசிப்புக்கு(Visitation) அனுப்பவேண்டுமென்றும் பரிந்துரைத்திருந்தார். இதற்குப் ஒரு நீண்ட பதிலறிக்கையை ஒரட்டோரியன் சபை குருக்கள் அனுப்பினர். எனினும் பின்னர் கொச்சின் ஆயர் எழுதிய மடல்களைப்பார்க்கும் போது இலங்கை ஒரட்டோரியன் சபைக்கு ருக்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்களை அவர் காத்திரமாக எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆயர் டொம் ஜோஸ் டி சொலேடாஸ் இலங்கைக்குச் செல்லமுடியாவிட்டாலும் இலங்கைப் பணித்தள நிலைமைகளையும், ஒரட்டோரியன் சபைக்குருக்களின் பணிகளையும், அவற்றில் காணப்பட்ட சில குறைபாடுகளையும் அறிந்திருந்தது மட்டுமல்ல, மறைப்பணி வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய ஆலோசனைகளையும் தமது மடல்கள் வழி வழங்கிவந்தார்.

ஒல்லாந்தர் வசம் இருந்தமை, மற்றும் முன்குறிப்பிட்ட பல்வேறு சிக்கல்களினால் கொச்சின் மறை மாவட்டமும் அதன் ஆயர்களும் பல்வேறு நெருக்குவாரங்கள் மத்தியில்தான் மறை மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் போக முடியாத நிலையில் பணியாற்ற வேண்டியிருந்தது. 1796ல் இலங்கை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னரும் கொச்சின் ஆயர் இலங்கைக்கு வர முடியவில்லை. இதனால் இலங்கையில் உள்ள கத்தோலிக்கருக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் பல வருடங்களாக வழங்கப்படாத நிலையில் பாப்பரசரின் விசேட ஆணையினால் அந்த அதிகாரம் இலங்கையில் இருந்த ஒரட்டோரியன் சபை முதல்வருக்கு வழங்கப்பட்டதாக 1802ம் ஆண்டின் ஒரட்டோரியன் சபை அறிக்கை குறிப்பிடுகின்றது. 1829ம் ஆண்டின் அறிக்கையின் படி அவ்வருடம் இலங்கை ஒரட்டோரியன் சபை முதல்வர் 235 பேருக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கியிருந்தார்.

கொச்சின் மறைமாவட்டத்தைப் பொறுத்தளவில் ஆயர் டொம் ஜோஸ் டி சொலேடாட்டின் பதவிக்காலம் 1817ல் முடிவடைந்த பின் 1887 வரை கொச்சின் ஆயர் பதவி கூடிய காலம் வெறுமையாகவே இருந்தது. இவ்விடைப்பட்ட காலத்தில் 1819ம் ஆண்டு டொம் தோமஸ் டி நொ ரோன் ஹா இ பிறிட்டோ (டோமினிக்கன் சபை) (O.P..) 1832ம் ஆண்டு டொம் ஜோவாக்கிம் டி சாந்த றீற்றா போத்தெல்லோ (Dom Joakim De Santa Rita) என்பவரும் ஆயராக இருந்துள்ளனர். இலங்கையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரட்டோரியன் சபைக்குருக்களும் கோவா அதியுயர் மறைமாவட்டத்தில் இருந்த தமது சபை முதல்வர்களுடனேயே தொடர்புகளைப் பேணி, வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் பெற்று வந்தனர்.

இதுவரையும் மெது வாகவும் நிதானமாகவும் செயல்பட்டுவந்த ரோமை தலைமைப்பீடம் (விசுவாசப்பரப்புதல் சபை) போர்த்துக்கல் அரசு தொடந்தும் பத்ரோவாதோ உடன்படிக்கையின்படி தனதுபக்கப் பொறுப்புக்களை நிறைவேற்றாது போனால் அதற்குட்பட்ட நாடுகளின் மறைபோதகப் பணி மோசமாகப் பாதிக்கப்படும் என்பதையுணர்ந்து ஒருபக்கச்சார்பாக இம்முறை போதக நாடுகளின் நலனுக்காக சில காத்திரமான முடிவுகளை எடுக்கத் தொடங்கியது.

(தொடரும்...)

# இயேசுவின் வார்த்தைகளை நடைமுறைப்படுத்த தூய ஆவியார் உதவுகிறார்

**எ**த்தனை துன்பங்கள், இடர்பாடுகள் வந்தாலும், நாம் தனிமையில் இல்லை, தூய ஆவியாரின் இருப்பின் அடையாளமே, இயேசு தம் திருத்தூதர்களுக்கு வழங்கும் அமைதி என, எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாம் ஒருவர் மற்றவரை சகோதரராக அன்பு கூர்வதைத் தடை செய்யும் சுயநலத்திலிருந்து வெற்றி பெறுவதிலிருந்து எழுவதே இயேசுவின் அமைதி எனவும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியார் சீடர்களைப் பாதுகாத்து ஊக்கம் வழங்குவதோடு, அவர்களுக்கு கற்பிக்கும் பணியையும், அதாவது இயேசுவின் வார்த்தைகளை அவர்களில் மீண்டும் தூண்டி எழுப்பும் பணியையும் கொண்டுள்ளார் என உரைத்தார்.

இயேசுவின் வார்த்தைகளைத் தூய ஆவியார் நமக்கு நினைவுபடுத்துவது எதற்கெனில், அவைகளை நாம், நம் வாழ்வின் பல்வேறு சூழல்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே எனவும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தூய ஆவியாரின் கொடை வழியாக இயேசுவின் புதிய பிரசன்னம், வரலாற்றில் மீண்டும் இடம்பெறுகிறது என்பதையும் வலியுறுத்திய திருத்தந்தை, இயேசுவைப் போல் நாமும் பிறரன்பில் திகழ தூய ஆவியார் உதவுகிறார் எனவும் எடுத்துரைத்தார்.

## அடிக்கல் நாட்டல்



யா/இளவாலை மடம் ம.வி இன் ஆரம்பப்பிரிவு இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. செ.சந்திரராஜா அவர்களால் நாட்டப்பட்டது. இந்நிகழ்விற்கு இளவாலைப் பங்குத் தந்தை அருட்பணி எம்.யேசுரட்ணம் அடிகளார் ஆசீர் வழங்குவதையும், பாடசாலை அதிபர் அருட்சகோதரி. ஜெயநாயகி. செப மாலை அவர்களும், புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பணி. J.A.யேசுதாஸ் அடிகளார் அவர்களும் உடன் நிற்பதை படங்களில் காணலாம்.

## இந்தோனேசியாவில் தேசிய ஒற்றுமைக்காக செபமாலை

இந்தோனேசியாவின் தேசியக் கொடியை, சிவப்பு மற்றும் வெண்மை நிறச் செபமாலை மணிகளால் அழகுபடுத்தி, அந்நாட்டின் ஒற்றுமைக்காக, இந்த மே மாதத்தில், செபமாலை செபிக்கும் புதிய முயற்சி ஒன்றை, ஜகார்த்தா உயர்மறை மாவட்டம் தொடங்கியுள்ளது.

இந்தோனேசியாவில் ஒற்றுமை ஏற்படுவதற்காக, கத்தோலிக்கர் செபமாலை செபிக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்தி இந்நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது ஜகார்த்தா உயர்மறைமாவட்டம்.

இந்தோனேசியாவின் தேசியக் கொடியின் நிறங்களை நினைவுபடுத்துவதற்கும், அந்நாட்டின் பஞ்சசீலக் கொள்கை அமல்படுத்தப்படுவதை வலியுறுத்துவதற்கும், சிவப்பு மற்றும் வெண்மை நிற மணிகளாலான செபமாலையைத் தேர்ந்தெடுத்ததாக, ஜகார்த்தா உயர்மறை மாவட்ட திருவழிபாட்டு ஆணைத் தலைவர் அருள்பணி Hieronymus Sridanto Aribowo அவர்கள் தெரிவித்தார்.

இந்தோனேசியத் தேசியக் கொடியின் சிவப்பு நிறம், உண்மையைப் பாதுகாக்கும் துணிச்சலையும், வெண்மை நிறம், நேரமையையும் குறிக் கின்றன.

ஜகார்த்தா உயர்மறை மாவட்டத்தின் 65 பங்குகளில், தேசிய ஒற்றுமைக்காக, மே முதல் தேதியிலிருந்து, சிவப்பு-வெண்மை நிற செபமாலை முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

## மத வெறிபிடித்தவர்களை புறந்தள்ள வேண்டும் மட்டுநகர் ஆயர் பொன்னையா

மத வெறியைத் தூண்டி அதில் குளிர்காய முனையும் அரசியல்வாதிகளையும் மதத் தலைவர்களையும் இனங்கண்டு அவர்களைப் புறந்தள்ளவேண்டுமென மட்டக்களப்பு-அம்பாறை மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற, அமைதிக்கான இலங்கை மதங்களின் பேரவையின் ஆண்டு ஒன்றுகூடல் பெருவிழாவில் உரையாற்றிய ஆயர் ஜோசப் பொன்னையா அவர்கள், மதத்தின் பெயரால் கொடூரங்களும், வன்முறை நிகழ்வுகளும், உலகின் பல பாகங்களிலும் அரங்கேறி வருவதையும், மத நல்லிணக்கமும் சகிப்புத்தன்மையும் கற்பூரம்போல் கரைந்து வருவதையும் பார்க்கும்போது வேதனையளிக்கின்றது என்றார்.

சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் வழிபாட்டு முறைகளையும் நுணுக்கமாக கடைப்பிடிப்பதை கடந்து, மனிதரை இறைவனோடு உறவுகொள்ளச் செய்து அவர்களின் இதயங்களில் இருக்கும் தீமைகளைக் களைந்து, இறைத்தன்மையினை அவர்களில் நிலைபெறச் செய்யும் ஓர் அருள்கருவியாக மதங்கள் விளங்கவேண்டும் என அழைப்பு விடுத்த ஆயர் ஜோசப் பொன்னையா அவர்கள், மத வேறுபாடுகளை ஊதிப் பெரிதுபடுத்தி, மதத்தின் பெயரால் பிளவுகளை ஏற்படுத்தும் பாசிச போக்கு ஒழிய வேண்டும், மற்றும், மத நல்லிணக்கத்தையும் மத ஒற்றுமையையும் வளர்க்க வேண்டுமானால், பிற மதங்களின் கோட்பாடுகளை அறிதல் அவசியமாகும் எனவும் எடுத்துரைத்தார்.

அமைதிக்கான இலங்கை மதங்களின் பேரவையின் தலைவர் சுவாமி ஸ்ரீமத் பிரபு பிரபாணந்த ஜி மகராஜ் தலைமையில் இந்த ஒன்று கூடல், பல்மத பிரதிநிதிகளுடன், மட்டக்களப்பு கல்லடி, உப்போடை சாரதா தேவி ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

## கிறிஸ்தவர்க்கு இரட்டை வாழ்வு கூடாது

புறத்தோற்றத்தில் வெளிச்சமாகவும், இதயங்களில் இருள் நிறைந்தும் வாழும் இரட்டை வாழ்வு குறித்து எச்சரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றுமாக வாழ்கின்ற இரட்டை வாழ்வை கிறிஸ்தவர்கள் வாழக் கூடாது என்றும், இருளான பாதைகளில் கடவுளின் உண்மைகளைக் கண்டு கொள்ள முடியாது என்பதால், ஒளியில் நடக்குமாறும், கிறிஸ்தவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார் திருத்தந்தை.

நாம் தவறிழைக்கும்போது, கடவுளின் மன்னிப்பையும், அவரது கனிவையும் தேட வேண்டும், அதுவே ஒளியின் வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்றும், இதுவே கிறிஸ்தவ வாழ்வு என்றும், நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நாம் பொய்யர்கள் என்றும் மறையுரையில் கூறினார் திருத்தந்தை.

பாவம் செய்யாதீர்கள், யாரேனும் பாவம் செய்தால், அதைப் பார்த்து சோர்ந்து விடாதீர்கள் என்று தூய யோவான் சொல்கிறார் என்றுரைத்த திருத்தந்தை, நாம் பாவம் செய்துவிட்டால், நம்மை மன்னிப்பதற்குக் காத்திருப்பவரை நோக்க வேண்டும் என்றும் கூறினார்.

கடவுள் ஒளியாய் இருப்பதால் நாம் ஒளியில் நடக்க வேண்டும் என்றும், ஒளியில் ஒரு காலும், இருளில் ஒரு காலும் வைத்து நடக்கக் கூடாது என்றும், பொய்யர்களாக வாழக் கூடாது என்றும் மறையுரையில் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## புதிதாய் வாழ்வதில் நாம்?

படைப்பின் முதல்வனின் படைப்புக்கள்
நடைமுறையில் எப்போதும் புதுப்பித்தலை
உடையனவாய் திகழ்வதே இயற்கைநியதி
படைப்பாளும் மனிதனின் வாழ்வில் புதுப்பித்தல்
எடைபோடும் அளவில் எத்தன்மையானது?
— சிந்திப்போமா...?

காலங்களுக்கும் யுகங்களுக்கும் விடைபகரும்
காலங்களைக் கடந்த கடவுளின் எண்ணமோ
படைப்பின் சிகரமான மனிதனை தன் உயர்
உடைமை யாக்குவதையே குறியாய்க் கொண்டது

சமகால நவீனமயமான சவாலான சூழலும்
தமக்கேயுரிய கண்டறிவில் கணக்கிடவியலா
புதியனவற்றையும் புதுமைகளையும் தாங்கி
புதிய உலகை மாற்றுவதில் முனைப்பாகின்றது

இயற்கையோடும் செயற்கையோடும் இரண்டற
இயைபுபெற்ற மனிதன் இவற்றையும் கடந்து
இணையில்லா பேரின்பத்தில் பங்கேற்கும் உன்னத
இயல்பினை அணிந்தவன் என்பதை மறக்கலாமா?

மறக்கவோ மறுக்கவோ முடியாத மாற்றத்தில்
மனங்களைப் புதுப்பிப்பதையே இலக்காக்கி
"புதிதாய் வாழ்வோம்" என்னும் தொனிப்பொருளில்
புதியஆயரும் முன்னின்றே அமைத்துள்ளார்

விஞ்ஞானத்தின் புதுமைகளைப் படைப்போர் பலர்
மெய்ஞானத்தின் புதுமைகளைப் படைப்போர் யார்?
ஞானத்தின் ஒளியில் உண்மையின் வழியில்
அஞ்ஞான இருளகற்றும் ஆன்மீக அறிஞனே அவன்!

ஆன்மீக அறிவென்பதை ஆய்ந்து நோக்குகையில்
ஆயரின் தூரநோக்கு யதார்த்தமான பதிலாகின்றது
அற்புதமான இறையியல் மெய்யியல் அறிவு மட்டுமன்று
இற்றுப்போன இதயங்களுக்கு இறைவனைக் காட்டுவதே


நிகழ்கால வாழ்வில் இற்றுப்போனவர்கள் யார்?
புகழ் என்ற போர்வைக்குள் தம்மை முடக்குவோரும்
அகழிச் சேற்றில் சிக்கி அநீதியாய் வாழ்வோரும்
இகழ்ந்துரைத்துப் பிறரை அவமானப் படுத்துவோரும்
- மட்டுமன்று

இன.மத.சாதி.மொழி பேதங்களினால்
இனங்களின் ஒற்றுமையைக் குலைப்போரும்
அடிமைப்படுத்தலில் ஆணவத்தை விதைப்போரும்
மிடிமை வாழ்வைக் கெடுத்து இளமையை இழப்போரும்
- மட்டுமன்று

களவு, பொய், காமத்தீயினால் சமூகத்தை வதைப்போரும்
மதுவின் மயக்கத்தில் இறைமாண்பை சிதைப்போரும்
உளவுகொண்டு உண்மை நீதியை ஒழிப்போரும்
மாதுவின் போதையில் மானத்தை அழிப்போரும்
- மட்டுமன்று

ஒட்டுமொத்தமாக ஆன்மீகத்தையே தொலைத்து
கட்டியெழுப்ப வேண்டிய விசுவாசத்தை புதைத்து
ஆண்டவன் முகம் நோக்க முன்வராது, தப்பறையில்
ஆலய விளிம்புச் சூழலையே விட்டகன்று வாழ்வோர்

தம் இற்றுப் போனகந்தல் மன உடைகளைக் களைந்து
எம் வற்றாத இரக்கமுடை இறைவனின் பதம் நாடிவந்து
தம் ஆன்மாவைத் தூய்மை எனும் புத்தாடையால்
அலங்கரித்து
எம் ஆயரின் புதிதாய் வாழும குரலொலிக்கு
செவிமடுத்து — அவர்
தம் மந்தைகளாய் இணைவதில் நாம் தயாராவோம்!



**ஆக்கம்:**
**S.M.வுளோறன்ஸ் (இளவாலை)**

யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு - 2016

- சிறப்புக் கட்டுரை - 04

# புதுப்பித்தலுக்கு ஓர் அழைப்பு

### அழுகைக்கு ஓர் எல்லை இல்லையா?

இறுதி யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியில் கணவர்களை இழந்த விதவைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும் எத்தனை தடவை எத்தனை பேர் முன்னிலையில் கதறி அழவேண்டும்? உள்ளக விசாரணை என்ற பெயரில் இப்பெற்றோர்களையும், விதவைகளையும் மீண்டும் மீண்டும் 'அழவைத்து' ஏன் சித்திரவதை செய்கிறார்கள்? நொந்தவர்களை மேலும் நோகச் செய்யும் நோயா இது? (traumatizing the traumatized).

அதே வேளை, இந்த விதவைகளும் பெற்றோரும் ஏதோ ஓர் இனமறியா நம்பிக்கையில் மீண்டும் மீண்டும் இந்த உள்ளக விசாரணை செய்வோர் முன்னிலையில் 'பிச்சை' கேட்கிறார்களே!

### நோயா, இது?

இழப்புகளுக்கு வருந்தி, அதனின்று வெளியேறுவது ஓர் ஆரோக்கியமான செயல் என்பது உளவியல் கூற்று. ஆனால், அந்த வருந்துதல் (grieving process) ஒரு வரையறைக்குள் நடைபெறுவது ஆரோக்கியமானது, அவசியமானது. வரையறைகளை மீறி எல்லைகள் இன்றி வாழ்வது ஆரோக்கியமற்றது.

இவ் இழப்புகளையும் தாங்கிக் கொண்டு இந்த மக்கள் இன்னமும் வாழ்கின்றார்களே! இல்லை வாழ்வது போல உயிரோடு இருக்கின்றார்களா? வாழ்ந்துதானே ஆகவேண்டுமென்ற ஒருநிலையில் செயற்கையாக ஒரு நம்பிக்கையை உருவாக்கி வாழ முனைகின்றார்களா? இந்த நம்பிக்கை ஏமாற்றப்பட்ட ஓர் அனுபவத்திலிருந்துதான் தோன்றியதா? தோன்றுகின்றதா? இதுதான் உண்மையென்றால் வாழ்வதற்கு ஒரு நம்பிக்கை ஏமாற்றத்தில்தான் தோன்ற வேண்டும், ஆகவே ஏமாற்றுவது அவசியம் என்ற ஒரு துன்பியல் வாழ்வில் தம்மைத்தாமே அமிழ்த்திவிடுவார்களா?

இதுதான் யாழ் மறைமாவட்ட மக்களின் அரசியல் - சமூக களநிலை. இப்படிப்பட்ட நிலையில் ஒரு புதுப்பித்தல் நடக்குமா? மக்களினது அன்றாட வாழ்விலிருந்து மதத்தைப் புறம்பாக்கி மதத்தில் ஒரு புதுப்பித்தலை கொணர முனைந்தால், அது மக்களை இரட்டை வாதத்தில் (Dualism) சிக்கவைத்து மக்களிடையே ஒரு 'நிரந்தர' அகப்பிளவை ஏற்படுத்தும். அது ஆன்மீக வளர்ச்சிக்கோ, மனித முழுமைக்கோ உதவி செய்யாது. அகப்பிளவிற்கும் ஆன்மீகத்திற்கும் உள்ள தொடர்பை இன்னொரு கட்டுரையில் எழுதுவேன், எழுதவேண்டும்.

### மதத்தின்நிலை

இதுவரை யாழ் மறைமாவட்டத் தமிழ் மக்களின் அரசியல் - சமூக களநிலையை அறிவதன் அவசியத்தை மேலெழுந்த வாரியாக சொல்லியுள்ளேன்.

இனி மத ரீதியாக யாழ் மறைமாவட்டம் எங்கு நிற்கிறது என்று பார்ப்பது அவசியம். போருக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி கத்தோலிக்க ஆலயங்களில் திருவழிபாடுகளும், வேறு பல ஆராதனைகளும், செபங்களும், பக்தி முயற்சிகளும் எந்தவிதமான மாற்றமும் இன்றி பெரிதாகவும் சிறிதாகவும் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளன. இடிந்த பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பங்கு மனைகள் கட்டப்பட்டுள்ளன. பொதுவாகச் சொல்வார்கள். "சாதாரண நிலைக்கு திரும்பியுள்ளோம்." இந்த "சாதாரண நிலை என்ன? "திரும்பி உள்ளோம்" என்பதன் அர்த்தமென்ன?

போரின்பொழுது சமாதானத்திற்குச் செபங்கள் உருவாக்கபட்டு மக்களைக் கொண்டு செபித்தோம். இது இப்பொழுது பெரிதாக இல்லை! சமாதானம் வந்துவிட்டதா? போரின்பொழுது சமாதானத்திற்கு செபித்த செபமா? அன்றேல் போரை கடவுள் நிறுத்த வேண்டுமென்று கேட்ட செபமா என்பதில் தெளிவில்லை.

கடும்போரின் பொழுது பல மக்கள் கேட்டார்கள். "சமாதானத்திற்காக செபிக்கின்றோம். ஏன் கடவுள் எங்கள் மன்றாட்டைக் கேட்கவில்லை?" சிங்கள கத்தோலிக்க மக்களும் சமாதானத்திற்காகச் செபித்தார்கள். ஆனால், தங்களுக்கு சார்பான சமாதானத்தை அவர்கள் விண்ணப் பித்தார்கள். தமிழ்க் கத்தோலிக்க மக்களும் சமாதானத்திற்காகச் செபித்தார்கள். இவர்களும் தமக்குச் சார்பான சமாதானத்தையே கடவுளிடம் கேட்டார்கள். இந்த இரண்டிற்கும் நடுவே கடவுள் என்ன செய்தாரோ எனக்குத் தெரியாது!!

மக்களின் வாழ்வும் வழிபாடும் (ஆராதனைகள், பக்தி முயற்சிகள் அனைத்தும் உட்பட) இரண்டு தண்டவாளங்களில் ஓடுகின்றன. இந்தத் தண்ட வாளங்கள் ஒன்றையொன்று சந்திப்பதில்லை. சந்திகள் சிலவற்றில் சிறது நேரம் சந்தித்தாலும் மீண்டும் சந்திக்காமலே செல்கின்றன. அதுபோலவே மக்களின் மதமும், வாழ்வும். அவை சந்திப்பதில்லை. அதனால்தான் என்னவோ, இப்படிப்பட்ட மக்களில் (கற்றவர்களிலும் சரி கல்லாதவர்களிலும் சரி), மதவெறியைத் தூண்டிவிடுவது சுலபமாகின்றது.


### ஆன்மீக வறுமை

நான் எனது கருத்தரங்குகளிலும் ஞானொடுக்கங்களிலும் அடிக்கடி சொல்வதை இவ்விடத்தே குறிப்பிட விரும்புகின்றேன். இந்நாட்டில் நான்கு முக்கிய மதங்கள் உண்டு. பௌத்த விகாரைகளில் மக்கள் திரள்கிறார்கள். சைவ ஆலயங்களில் மக்கள் கூட்டம் பெரிது. இஸ்லாமிய பள்ளிவாசல்களில் பல பக்தியான செபம். கிறீஸ்தவ ஆலயங்களில் மக்கள் பொங்கி வழிகிறார்கள். ஆராதனைகள் செபங்கள், வழிபாடுகள் சத்தத்துடன் கேட்கின்றது. இருந்தும், இந்த நாட்டில் சிந்திய மனித இரத்தம் எவ்வளவு? யுத்தம் முடிந்தும் இன்னமும் போர் முடியவில்லை. இன்றும் கொலைகள், கற்பழிப்புகள், சிறார் துஸ்ப்பிரயோகம், களவு (தலைவர்கள் மட்டில் பெரிதாக உள்ளது).

பொய், அநீதி, பாரபட்சம் என்று வளர்ந்து கொண்டு தானே போகின்றது? மதம் (மதங்களில்) பெரிதாக உள்ள இந்த நாட்டில் ஓர் ஆன்மீக வறுமையும் பெரிதாக உள்ளது. மதங்கள் தவறிவிட்டனவா? மதங்கள் மக்களைத் தவறான அல்லது ஒரு புறம்பான திசையில் வளர்த்துவிட்டனவா? மதம் மக்கள் வாழ்வில் இருந்து பிரிக்கப்பட்டுவிட்டதா? யாழ் மறைமாவட்ட மதத்தின் உண்மையான களநிலை என்ன? மதம் இரட்டைவாதத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ளதா? மக்களின் (இறை மக்களின்) உண்மையான மதநிலையென்ன? இங்கு யதார்த்தம் அவசியம். மூடி மறைக்கவோ, நியாயப்படுத்தவோ கூடாது. அச்செயல் உண்மையான புதுப்பித்தலுக்கு உதவாது. **(வளரும்)...**

கரவையூர்ச் செல்வம்

## பற்றிமா அன்னையின்
## யாழ் மறை மாவட்ட யாத்திரைத் தலம் - பண்டத்தரிப்பு



1945 காலப்பகுதியில் சில்லாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த ஹென்றி ஜெலான் அடிகள் பண்டத்தரிப்பில் பிற்கால முக்கியத்துத்தை ஏற்கனவே அறிந்து, பரிசுத்த கன்னிமரியாவுக்கு ஒரு பெரிய இடத்தை அர்ப்பணிக்க முடிவு செய்தார். பண்டத்தரிப்பு, போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே முக்கியத்துவம் வாய்ந்த இடமாக விளங்குகின்றது. இங்கு போர்த்துக்கேயரால் இராசமுருக்கு என்ற மரம் வைக்கப்பட்டது. நாளடைவில் இம்மரம் விருட்சி பெற்று முதுபெரும் விருட்சங்களில் ஒன்றாகி பேய், பூதங்கள் உறையும் தலமாக பண்டத்தரிப்பு மக்களால் கருதப்பட்டு, ஒதுக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் பங்குக்குருவாக அருட்தந்தை ஹென்றி ஜெலான் (அ.ம.தி) அடிகள் பணிபுரிந்தார். அன்றைய காலப்பகுதியில் டச்சு வீதி என அழைக்கப்பட்ட இராசமுருக்கு வழியாக, பெரிய விளான் மக்களுக்குப் பணிபுரிய செல்வது வழக்கம். இவர் பத்திமா மாதாவில் ஆழமான பக்தி கொண்டிருந்தார். இவ்வழியூடாக செல்லுகின்ற போதும், இந்த இராசமுருக்கு மரத்தை நோக்குகின்றபோதும் போர்த்துக்கலில் பத்திமாவில், அன்னை கருவாலி மரத்தில் காட்சி கொடுத்த எண்ணம் அவர் மனதில் எழுந்தது. எனவே அவர் அன்றைய ஆயர் கியோமர் ஆண்டகையின் ஆசியையும் அனுமதியையும் பெற்று, கல்லும் முள்ளும் நிறைந்த அப்பகுதியை திருத்தியமைத்தார். பின்னர் இங்கு ஒரு உயர்ந்த தூபி எழுப்பப்பட்டு, அதன் உச்சியில் பத்திமா அன்னையின் சுரூபத்தையும் வைத்தார். அப்பகுதியும் இராசமுருக்கு மரமும் ஆசீர்வதிக்கப்பட்டு, அப்பகுதி **"பத்திமாகிரி"** என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இதற்கு முழு ஒத்துழைப்பையும் அப்போதைய ஆயர் கியோமர் ஆண்டகை வழங்கிய நிலையில் பத்திமாகிரியில் பழைய ஆலயத்தை அமைத்தார். அதை விருத்தி செய்ய அரும்பாடுபட்டு உழைத்தார். பத்திமாகிரியில் இருந்துகொண்டே வசதிகள் குறைந்த அந்தக்காலத்திலே பத்திமா அன்னை பற்றிய சஞ்சிகையை வெளியிட்டார். அத்தகைய எழுத்து முயற்சிகளின் கொடுமுடியாக 1948 ஆண்டு **"அவர்கள் மூன்று சிறுவர்கள்"** என்ற புத்தம் புதிய நூலை ஆயரின் உத்தரவைப் பெற்று, 1949 இல் பண்டத்தரிப்பு பத்திமாகிரியிலிருந்து வெளியிட்டார். அதிலே பத்திமா காட்சி பற்றிய முழுச்சரித்திரமும் 340 பக்கங்களில் அச்சடித்தும், பத்திமா பதிக்குரிய சிறந்த பாடல்கள் பத்து (10) கையால் எழுதப்பட்டும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதே காலப்பகுதியில் அருட்தந்தை ஹென்றி ஜெலான் (அ.ம.தி) அடிகள் அவர்களால், போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆள் அளவு உயரமான சுரூபம், அவர் கட்டிய ஆலயத்தில் (பழைய ஆலயம்) வைக்கப்பட்டது. இச்சுரூபம் பத்திமா மாதா காட்சியளித்த கப்பிளினா எனும் ஆலயத்திலே உள்ள சுரூபத்தின் சாயலில் செய்யப்பட்ட முதலாவது சுரூபம் ஆகும்.

முதற்சனி பக்தி முயற்சிக்கு வருகைதரும் மக்களின் நலன்கருதி, முன்னாள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன், 2003 ஆம் ஆண்டு புதிய ஆலயம் ஒன்று அருட்தந்தை ம.பெ. ஞானரட்ணம் அடிகளாரால் அமைக்கப்பட்டது. பழைய ஆலயத்திலிருந்த போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சுரூபம், தற்போதைய புதிய ஆலயத்தின் போட்டிக்கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. பழைய ஆலயம் இன்றுவரை நல்லமுறையில் பேணப்பட்டு வருகின்றது. இத்திருத்தலத்திற்கு பலதிசைகளிலிருந்து பெருவெள்ளமாக வந்து, பக்தர்கள் இன, மத வேறுபாடின்றி பத்திமா அன்னையைத் தரிசித்து, இறையருளையும், அன்னையின் ஆசீரையும் பெற்று மனநிறைவடைந்து வருகின்றார்கள்.

யாழ். ஆயர் அவர்களின் தலைமையில் காலை 6.15 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெறவுள்ளது.

இ.கனிஸ்ரா, பொ.சுதர்சினி.

(1ம் பக்க தொட...)

**திருத்தந்தைக்கு...**

வழங்கிய உரையில், பழம் பெரும் கலாச்சாரங்களின் விளைநிலமான ஐரோப்பிய கண்டம், அமைதியிலும், சமுதாய வளர்ச்சியிலும் அக்கறை காட்டவேண்டும் என்று விடுத்த அழைப்பு, இவ்விருதினை அவர் பெறுவதற்கு ஒரு காரணமாக அமைந்ததென விருது வழங்கும் குழு அறிவித்துள்ளது.

இரக்கம், சகிப்புத்தன்மை, ஒருங்கிணைப்பு, படைப்பு அனைத்துடன் வாழும் வழிகள் ஆகியவற்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் பணியில் இணைத்துள்ளதற்காக, இவ்விருதுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று விருது வழங்கும் குழுவினர் கூறியுள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த விருதினைப் பெறும் இரண்டாவது திருத்தந்தை ஆவார். ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைப்பிற்காக உழைத்த, திருத்தந்தை புனித 2ம் யோன்பால் அவர்களுக்கும் 2004ம் ஆண்டு இவ்விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்க தொட...)

**"கண்ணீரைத்...**

என்ற திருவிழிப்பு வழிபாட்டை அறிவித்துள்ளார் என்று உரோம் நகரில் இயங்கிவரும் UNITALSI என்ற பிறரன்புப் பணி அமைப்பின் தலைவர், Emanuele Trancalini அவர்கள் கூறினார்.

இவ்வியாழன் மாலை 6 மணிக்கு புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் நடைபெறும் வழிபாட்டிற்கு மாற்றுத் திறனாளிகள் பலரை அழைத்து வரும் UNITALSI அமைப்பின் தலைவர் இவ்வாறு கூறினார்.

புனிதக் கதவை நாடிவர இயலாமல், நோயாலும், தனிமையாலும் துயருறும் பலரை மனதில் கொண்டு, திருத்தந்தை இந்த வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளார் என்று UNITALSI அமைப்பின் பொறுப்பாளர்களில் ஒருவர் கூறினார்.

இத்தாலியின் சிசிலித் தீவில் அமைந்துள்ள சிரக்கூசா நகரில் 1953ம் ஆண்டு நிகழ்ந்த ஓர் அற்புத நிகழ்வில், தொழிலாளரான AngeloIannuso என்பவரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னை மரியாவின் உருவப்படம் கண்ணீர் விடத் துவங்கியது.

இந்த அற்புத நிகழ்வின் நினைவாக, இந்த அன்னையின் திரு உருவம், இவ்வியாழன் நடைபெறும் வழிபாட்டில் மக்கள் வணக்கத்திற்கென வைக்கப் படுகிறது.

(1ம் பக்க தொட...)

**கடத்தப்பட்ட...**

பத்து நாட்களுக்கு முன் தனக்குத் தகவல் கிடைத்தது என்றும், அதற்குப் பின், வேறு எந்தத் தகவலும் வெளியாக வில்லை என்றும், தெற்கு அரேபிய அப்போஸ்தலிக்க நிர்வாகி, ஆயர் பால் ஹிண்டர் அவர்கள் பீதேஸ் நிறுவனத் திடம் கூறினார்.

அருளாளர் அன்னை தெரேசா உருவாக்கிய சபையைச்சேர்ந்த 4 அருள் சகோதரிகள் கொலையுண்ட பின்னரும், ஏமன் நாட்டில், அச்சபையின் சகோதரிகள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்று பீதேஸ் செய்தி மேலும் கூறுகிறது.

## மின்னாமல் முழங்காமல் அசுரவேகத்தில், பழைய பத்திமா மாதா பற்றிய நூல் மீள் பதிப்பு – "அவர்கள் மூன்று சிறுவர்கள்"

1949 ஆம் ஆண்டு அருட்தந்தை ஹென்றி ஜெலான் அடிகளாரால் வெளியிடப்பட்ட **"அவர்கள் மூன்று சிறுவர்கள்"** எனும் நூல் யாழ் ஆயரின் அனுமதியுடன், மீள்பதிப்புச் செய்யப்பட்டு, 2016 வைகாசி 03 ஆம் நாள் பத்திமா அன்னையின் திருத்தல கொடியேற்ற ஆரம்ப நாளில், பரிபாலகர் அருட்தந்தை மைக்கல் APR சவுந்தரநாயகம் அடிகளாரால் வெளியிடப்பட்டது. இந்நூல் முந்நூற்று நாற்பது பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் பிரதி ஒன்றின் விலை ரூபா முந்நூறு (300/-) ஆகும். இப்பிரதிகளை பத்திமாகிரியில் பெற்றுக் கொள்ளலாம்.

இரணைப்பாலையில் அமைக்கப்பட்ட புதிய பங்குமனையை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கடந்த 4ம் திகதி திறந்துவைத்தார்








# தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை

**14.05.2016 சனிக்கிழமை**

**இரவு 6.30 மணிமுதல் அதிகாலை வரை புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில்**

- இரவு 6.30 - செபமாலை,
- இரவு 7.00 - திருவிழிப்புத் திருப்பலி
- தொடர்ந்து தியானங்களும் ஆராதனைகளும், நற்கருணை ஆசீரும்.
- அதிகாலை 4.00 மணிக்கு - ஆயர் தலைமையில் தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலி

**ஆயத்த வழிபாடுகள்**

11ம் திகதி புதன்கிழமை முதல் 13ம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை யாழ். இறைதியான இல்ல மண்டபத்தில் (தினமும் மாலை 4.30 மணிக்குத் திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனை)

**இவ்வருடம் திருவிழிப்பு ஆயத்த வழிபாடுகளையும் [புதன், வியாழன், வெள்ளி தினங்களில்] சனி இரவு திருவிழிப்பு ஆராதனையையும் கொழும்பிலிருந்து வருகைதரும் சகோ. நிக்கிலாஸ் கிசோக் அவர்களும் அவரது குழுவினரும் சிறப்பிப்பார்கள்.**

தூய ஆவியாரின் அபிஷேகம் பெற்று வாழ்வில் விடுதலையும் நிறைவும் கண்டு உயிர்த்த இயேசுவுக்குச் சாட்சிகளாக வாழ வரம் பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**இறைதியானக் குழுவினர்** **யாழ். மறைமாவட்டம்**


**கிளரேசியன் சபையின் இலங்கைக்கான புதிய மேலாளர் அருட்பணி றெக்ஸ் கொன்சன்றைன் CMF அடிகள்.**

இலங்கை கிளரேசியன் சபை முன்னோடிகளில் ஒருவரான அருட்பணி றெக்ஸ் கொன்சன்றைன் CMF அடிகளார் இலங்கைக்கான பேராளர் குழுவின் புதிய மேலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


**விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவலைகள்**



**திருமதி அருள்ராசா றோஸ்மலர்**

மண்ணகம்: 02.12.1943
விண்ணகம்: 13.05.2015

**"நான் தந்தையிடம் இருந்து உலகிற்கு வந்தேன் இப்போது உலகை விட்டு தந்தையிடம் செல்லுகின்றேன்" (யோ. 16:28)**

13.05.2016 அன்று காலை 6.00 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

Advt-51/16

நாவலந்துறை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


## 1917 இல் நடைபெற்ற மாசற்ற கன்னிமரியாளின் பத்திமா நகர் காட்சிகளுக்கு ஆயத்தமாக நிகழ்ந்த, சம்மனசானவர் தோன்றிய காட்சிகளின் நூறாவது ஆண்டு

போர்த்துக்கல் நாட்டின் பத்திமா எனும் இடத்தில் பரிசுத்த கன்னிமரியாவுடைய காட்சிகளுக்கு ஆயத்தமாக் யசிந்தா, பிரான்சீஸ், லூசியா ஆகிய மூன்று இடையச் சிறுவர்களுக்கு 1916 ஆம் ஆண்டிலே சம்மனசானவர் தோன்றியிருந்தார். இந்த இடையச் சிறுவர்களுக்குத் தோன்றிய சம்மனசானவர், மரியாயின் மாசற்ற இருதயத்தை நோக்கி மனந்திரும் புதலுக்காக செபிக்கும்படி கற்றுக்கொடுத்ததோடு, அவர்களோடு தாமும் முழந்தாட்படியிட்டு செபித்தார். இச்சம் மனசானவர் காட்சிகள் மூன்று இடங்களில் நடைபெற்றன. இச்சம்மனசானவர் காட்சிகளின் 100 ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து, அவ்வாண்டில் நாம் ஒவ்வொருவரும் கால்பதிப் பதையிட்டு மன மகிழ்வும் அடைய வேண்டும்.

**பண்டத்தரிப்பு பத்திமாகிரியில் யாழ். ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலி**

யாழ். மறைமாவட்டத்தின் புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்குவது, பண்டத்தரிப்பு பத்திமாகிரியில் அமைந்துள்ள **"பத்திமா அன்னை திருத்தலம்"** ஆகும். இவ்வாண்டின் திருநாள் திருப்பலிக்கு பத்திமா அன்னையின் முதலாம்காட்சிநாளாகிய வைகாசி 13 இல் பிறந்த நம் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வருகை தரவுள்ளார்.